# பொதிகை

## முன்னோடி இதழ்











**கல்முனை தமிழ்ச் சங்கம்**

61/1, யாட் வீதி, கல்முனை. தொலைபேசி இல: 067-2229903

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ் எங்கள் மூச்சென்று முழங்கு"

# பொதிகை

## முன்னோடி இதழ்

**கல்முனை தமிழ்ச் சங்கம்**

**2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதிகை

(முன்னோடி சிறப்பிதழ்)

| வரம்புகள் | பக்கம் |
|---|---|


| | |
|---|---|
| *கல்முனை தமிழ்ச்சங்க கீதம்* | 03 |
| *ஆசியுரை*<br>அருட்சகோதரர் கலாநிதி.எஸ்.ஏ.ஐ.மத்தியூ.(JP)<br>(ஆலோசகர், கல்முனை தமிழ்ச் சங்கம்) | 04 - 05 |
| *வாழ்த்துச் செய்தி*<br>கலாநிதி மு. கதிர்காமநாதன்<br>(முன்னாள் கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவர்) | 06 |
| *பாராட்டுச்செய்தி*<br>செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன்<br>(தலைவர், கண்ணகி இலக்கிய கூடல்) | 07 |
| *தலைவரிடமிருந்து...*<br>கலாநிதி பரதன் கந்தசாமி (JP)<br>(தலைவர், கல்முனை தமிழச் சங்கம்) | 08 - 09 |
| *செயலாளரிடமிருந்து...*<br>வித்திய விஜயஸ்ரீ .என். நாகராஜா(JP)<br>(செயலாளர், கல்முனை தமிழ்ச் சங்கம்) | 10 - 11 |
| *இதழாசிரியரிடமிருந்து...*<br>கலாநிதி எஸ்.கணேஸ்(JP)<br>(இணைப்பாளர், கல்முனை தமிழ்ச் சங்கம்) | 12 |
| *சாதனையாளர்களின் படங்களும் விபரங்களும்* | 13 - 15 |
| *பொதிகை மலரட்டும் (சிறப்புக் கவிதை)*<br>புலவர். ஆரையூர் அருள் | 16 |
| *பொருளாளரிடமிருந்து...*<br>கலாபூசணம் வே.சண்முகநாதன்(JP)<br>(பொருளாளர், கல்முனை தமிழ்ச் சங்கம்) | 17 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சங்க கீதம்

செம்மொழியாய்ச் சுடரேற்றிய தீபம்
தேசமெலாம் ஒளி வீசிடவே
நம்மொழியாம் தமிழன்னையின் பாதம்,
நாமிணைந்தே தொழுதேற்றிடுவோம்!

- செம்மொழி

முதல், இடை, கடையென்னும் முச்சங்கம்,
முறைதனில் வளர்ந்திடும் இச்சங்கம்.
இதமுடன் கல்முனை இருப்பினில் மலர்ந்தே,
ஏற்றமுடன் மணம் வீசுதுமே!

- செம்மொழி

பொதிகை மலைதனில் ஊற்றெடுத்து
புதுமைகள் பொங்கிடப் பேரெடுத்து,
நதியெனஓடி நலம்பல சேர்த்து
நாளும் பொலிவுடன் வாழியவே!

- செம்மொழி

ஆக்கம்:
**பாவாணர் அக்கரைப்பாக்கியன்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

**அருட்திரு கலாநிதி எஸ்.ஏ.ஐ.மத்தியூ ஜே.பி. கல்வியியலாளர் அவர்கள் வழங்கியது.**



பொதிகை இதழ் கல்முனைக் கல்வி வலயத்தில் க.பொ.த (உ/த) பரீட்சையில் 3A சித்தி பெற்றுக் கொண்ட தமிழ், முஸ்லிம் மாணவ மணிகளை கௌரவிக்கும் நோக்கில் மலர்கின்றது. இதற்கு கல்முனை தமிழ்ச் சங்கம் பெருமுயற்சி எடுத்துள்ளது. அந்த நல்ல உள்ளங்களுக்கு இறைவனின் நல்லாசியை வேண்டுகிறேன்.

பொதிகையிலே பிறந்து தென்னன் பொருப்பிலே வளர்ந்த தமிழ். அதனை காரேறு களனியும் அலைகள் நிறை கடலும் சூழ்ந்த கல்முனையில் பொதிகை எழுகிறது. அது வாழ்ந்து வளர்ந்து பல எழுத்தோவியர்களையும் வெளிக்கொணர முயற்சிக்கும். இது எனது நல்வாழ்த்து.

க.பொ.த(உ/த) பரீட்சையில் உயர்ந்த இறுதி முடிவுகளை பெற்றுக் கொள்வது சாதாரண விடயமல்ல. ஒரு பரீட்சைப் பெறுபேற்றை வினாப்பத்திரங்களில் தாங்கிவரும் கடின, இலகு கேள்விகளும் பரீட்சகரின் மனநிலையும் பரீட்சாத்தியின் அன்றைய மனநிலைகளும், உடல் நிலைகளும் பாதிக்கின்றன. இந்த பரீட்சைகளில் நானறிந்த கலைப்பிரிவைச் சார்ந்த 3A சித்தியைப் பெற்றுக் கொண்ட ஒருவர், க.பொ.த (சா/த) எழுதிய பொழுது நான்கு பாடங்களில் மாத்திரம் சித்தியடைந்தார். சமய தபோவனம் ஒன்று அவருக்கு கைகொடுத்து புகலிடமளித்தது. இரண்டாம் முறை சாதாரண பரீட்சையில் பல விசேட சித்திகளுடன் முன்னேறி, 2012ஆம் ஆண்டு முதல் தடவையிலேயே பல்கலைக்கழகம் செல்லக்கூடிய ஏறுநிலை வரிசையில் உயர்நிலை பெற்றமை சிந்திக்க வேண்டிய ஒன்று.

இவர்களைப் போன்ற உயர் கல்வியைப் பெறும் தகமை பெற்றும் பொருளாதார நெருக்கடிகளினால் கஷ்டப்படும் மாணவ மணிகளுக்கு கல்விசார் நிறுவனங்களும், கல்விச் சிந்தனை கொண்ட பரோபகாரிகளும் முன்வரவேண்டும் என்ற நோக்கில் இந்த "பொதிகை" மலர் சிறிய மலராயினும் காரம் நிறைந்த மலராக வெளிவருகின்றது. பார்த்துப் பரவசப்படுவதோடு நின்றுவிடாது துணிகரமாக செயலில் இறங்கிய சங்கத்திற்கும் பொருள் உதவிகள் வழங்கிய பெருந்தகைகளுக்கும் உடனின்று உழைக்கும் ஏனையோருக்கும் இறைவனின் நல்லாசிகள் நிகழ்ந்திடுவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாசிகளின் வரலாறு மிகப்பழமையானது. மக்களின் கலாசார வாழ்க்கையில், இறை நம்பிக்கையில் முதலிடம் பெறுகின்றன. எபிரேய விவிலிய ஆகமத்தில் அதன் முதல் புத்தகமே இறைவனின் நல்லாசிகளைக் கொண்டது. அந்த நல்லாசியின் பின்னணியில் ஆபிரகாம் என்னும் பெருந்தகை இறைவனேடு உடன்படிக்கை செய்வதாகவும் நாம் அறிகிறோம். ஆபிரகாமின் பேரனான யாக்கோபு தமது பேரப்பிள்ளைகளுக்கு நல்லாசிகளை வழங்குவதையும், பொருள்மிக்க ஒன்றாக நாம் உணர்ந்து கொள்கிறோம்.

இந்த நன்னூலுக்கும் ஆக்கிய பெருந்தகைகளுக்கும் பரிசு பெறும் உயர் அறிவாளர்களுக்கும் இந்த நல்ல முயற்சியில் தம்மை இணைத்துக் கொண்ட அனைவருக்கும் பிரார்த்தனையுடன் கூடிய நல்லாசிகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.



**அருட்திரு கலாநிதி எஸ்.ஏ.ஐ.மத்தியூ** ஜே.பி.

கல்வியியலாளர்.

151,எஸ்.எஸ்.ஜே. ஒழுங்கை,

கல்முனை.


16.07.2013.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தேன் மதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"** என்ற யுகக் கவிஞன் பாரதியின் குரலுக்கொப்ப கடல் கடந்த நாடுகளிலெல்லாம் தமிழ்ச் சங்கங்கள் தோற்றம் பெற்று, தமிழ்ப் பாரம்பரியங்களையும், கலை இலக்கியங்களையும் எழுச்சியுடன் எடுத்தியம்பி வருகின்றன.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தைப் பின்பற்றி அண்மையில் உருவாக்கப்பட்ட கல்முனை தமிழ்ச் சங்கம் அவ்வப்போது பாராட்டத்தக்க பணிகளை முன்னெடுத்து வருவது மகிழ்ச்சி தருகிறது. பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து, இருப்பை நிலைப்படுத்திக் கொண்டிருக்கும் இச் சங்கத்திற்கு, எமது கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஆதரவும், ஒத்துழைப்பும் என்றும் உண்டு.

கல்முனை பிரதேச மாணவர்களின் சாதனையைப் பாராட்டி இச்சங்கம் எடுக்கும் விழாவும், "பொதிகை" சஞ்சிகை வெளியீடும், எதிர்காலத்தில் ஏனைய மாணவர்களின் வெற்றிக்கும், முன்னேற்றத்திற்கும் உந்து சக்தியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வரும் கல்முனை தமிழ்ச் சங்கம் வளரவேண்டும், வாழவேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**கலாநிதி மு. கதிர்காமநாதன்,**
முன்னாள் கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளரும் பயிருக்கு உரமூட்டுவதும், சாதனையாளர்களைப் பாராட்டுவதும், நல்லவர்களை வாழும்போதே வாழ்த்துவதும், அறிவு பூர்வமான பணிகளாகும்.

அந்த வகையிலே கல்விமான்களும், கலைஞர்களும் நிறைந்து வாழும் பிரதேசத்தின், கல்முனை தமிழ்ச் சங்கம், கடந்த வருடம் க.பொ.த (உயர்தர) பரீட்சையிலே அதியுன்னத சித்தி பெற்ற மாணவ, மாணவிகளை இனமதம், பேதம் கடந்து பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

இந்நிகழ்வில் கல்முனை தமிழ்ச் சங்கத்தின் முத்திங்கள் இதழாக வெளிவரவிருக்கம், "பொதிகை" என்ற வெளியீட்டிற்கு முன்னோடியாக வெளியிடப் பெறும் இவ்விதழில், மாணவர் படங்களுடன் கூடிய ஆரம்பமானது எதிர்காலத்தில் மேலும் பல சாதனையாளர்களை உருவாக்க வழிவகுக்கக்கூடியதாகும்.

சாதனை படைத்த மாணவர்களையும், அவர்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் கல்முனை தமிழ்ச் சங்க நிருவாகத்தையும், உளப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

**செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன்,**
தலைவர்,
கண்ணகி இலக்கிய கூடல்,
மட்டக்களப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை பிரதேசத்திலே தமிழ்ப் புலத்தை வளப்படுத்தும் நோக்கில் கல்விமான்களினதும், எழுத்தாளர்களினதும், தமிழ் ஆர்வலர்களினதும் ஏற்பாட்டில் இரண்டாயிரத்து பத்தாமாண்டு மார்கழித் திங்கள் பத்தாம் திகதி கல்முனை தமிழ்ச்சங்கம் உதயமானது.

உலகளாவியரீதியில் புலம் பெயர்ந்துவாழும் எம் தமிழ் உறவுகள் அந்தந்த நாடுகளிலும், மாநிலங்களிலும், தமிழ்ச் சங்கங்களை நிறுவி, செம்மொழியாகிய நம் தழிழ்மொழியையும், கலைகலாசார விழுமியங்களையும், வளர்த்து வருகின்றனர். இதுபோன்று, எமது இலங்கை தாய்த் திருநாட்டிலும் கொழும்பு தமிழ்ச் சங்கம், பல்லாண்டுகாலமாக பல்துறைப்பணிகளாற்றி வளர்ச்சி கண்டு வருகின்றது. இதனை அடியொட்டி, தமிழர் வாழ்கின்ற பல்வேறு மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுவரும் தமிழ் சங்கங்கள் சிறந்த சேவைகளையும், தமிழியல் விழுமியங்களையும் வழங்கும் முனைப்பைக் கொண்டுள்ள இவ்வேளையில், கல்முனை தமிழ்ச் சங்கத்தையும் ஒரு காத்திரமான தளக்கோளத்தில் கட்டியெழுப்புவதற்கு பொருத்தமான யாப்பு உருவாக்கப்பட்டு சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பும், முறையான திட்டங்களும், வகுக்கப்பட்டு சங்கம் கிழக்குமாகாண கல்வி கலாசார அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கல்முனை பிரதேசத்திலே வானத்தை நோக்கி கல்லொன்றை வீசினால், அது நிச்சயமாக கலைஞன் ஒருவனின் தலையில் தான் விழும் என்று கூறக்கூடியவகையில் இப்பிரதேசத்தில் எழுத்தாளர்களும், இலக்கியவாதிகளும், படைப்பாளிகளும், கலைஞர்களும் நிறைந்து காணப்படுகிறார்கள். இருந்தும், யதார்த்தமாக நோக்கினால் இத்தகையோரின் பங்களிப்பையும், ஒத்துழைப்பையும் பெறுவதென்பது இலகுவான காரியமாக கருதக்கூடியதல்ல என்பது உண்மைக் கலைஞர்களுக்குத் தெரியும். இவர்களின் பிரசன்னத்தையும் பெற்றுக்கொள்ளும் வகையில் கல்முனை தமிழ் சங்கத்துள், மதியுரைஞரணி, மகளிரணி, மாணவரணி, ஆசிரியரணி, அதிபரணி, அண்ணாவிமாரணி, மூத்தோரணி எனப்பல்வேறு அணிகளை உருவாக்கி, அனைவரையும் உள்வாங்கி அங்கத்தவர் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

மேலும், எமது தாய்ச் சங்கமான கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெறுவது போல் நாளாந்த, வாராந்த, மாதாந்த நிகழச்சி நிரலுக்கொப்ப கல்விவட்டங்கள், கலை இலக்கிய கருத்திட்டங்கள், பயிற்சிப்பட்டறைகள், பட்டிமன்றங்கள், பாராட்டுவிழாக்கள், கவியரங்குகள், கதை சொல்லும் நேரம், நூல்வெளியீடுகள், பெரியோர் கௌரவிப்புக்கள், இலக்கிய சுற்றுலாக்கள், இலக்கிய மகாநாடுகள், என்றவகையில் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக கல்முனை நால்வர் கோட்டத்தில் அமைந்துள்ள தாமரை மண்டபத்தை தற்காலிகமாக நான்கு வருடத்திற்கு பயன்படுத்துவதற்கு அனுமதி பெற்றுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கடந்து வந்த காலத்தில் எமது கல்முனை தமிழ்ச் சங்கம் "தமிழ் எங்கள் மூச்சென்று முழங்கு" எனும் தலைப்பில் நடாத்திய கவியரங்கம், அருட்சகோதரர் கலாநிதி எஸ்.ஏ.ஐ.மத்தியூ அவர்களின் "அது ஒரு நிலக்காலம்" என்ற வரலாற்று நிகழ்வு, கலாபூசணம் வே.சண்முகநாதனின் புத்தக வெளியீடுகள், கலாபூசணம் அமரர். பரமநாதபிள்ளை அவர்களுக்கான நினைதல் நிகழ்வு, கவிஞர் அமரர் சண்முகம் சிவலிங்கத்திற்கான இரங்கல் கூட்டம், கவிஞர் முகில்வண்ணனின் கதை சொல்லும் நேரம், போன்ற நிகழ்வுகள் என்றும் மனதைவிட்டு அகலாதவை.

இந்த வகையில் கடந்த வருடம் கல்முனை வலய பாடசாலைகளிலே க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கு தோற்றி அதியுயர் 3(A) சித்தி பெற்று சாதனைபடைத்து இவ் வருடம் பல்கலைக் கழகத்தில் நுழைந்து எமது சமூகத்திற்கு பெருமை சேர்க்கவுள்ள மாணவச் செல்வங்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளோம். அத்தோடு இத்திறனாளிகளை எமது மாணவர் அணிக்குள் உள்வாங்கி, சிறப்பான இளைஞர் தலைவர்களையும், இளைய தலைமுறையையும், உருவாக்கி அவர்கள் கருத்துக்களுக்கு களமாக இப் "பொதிகை" என்ற சிற்றிதழை வழங்க தீர்மானித்துள்ளோம்.

மேலும், கல்முனை தமிழ்ச் சங்கமானது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, எல்லோரும் இணைந்து செயற்படக்கூடிய ஒரு ஜனநாயக பண்புள்ள அமைப்பாகும். அரசியல் சார்புக்கு அப்பாற்பட்டது, இன, மத பேதமற்றது. தாய்மொழியாகிய தமிழை நேசிக்கும் சகலரும் வாருங்கள், செம்மொழியாக எம்தமிழ் மொழியூடாக சமாதான சகவாழ்வு காண்போம், என வாஞ்சையுடன் அழைக்கிறேன்.

இந்நிகழ்வை இனிதுற நடத்த எமக்கு அனுசரணை வழங்கிய அமரர் சண்முகம் சிவலிங்கம் அவர்களின் புதல்வன் திரு.சசி வித்தியானி அவர்களையும் ஒத்துழைப்பு வழங்கிய கல்முனை மாணவ மீட்புப் பேரவைத் தலைவரும் எங்கள் தமிழ்ச் சங்க இணைப்பாளருமான கலாநிதி எஸ். கணேஸ் அவர்களையும், நன்கொடை வழங்கி உதவிய பெருந்தகைகளையும், நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவிருக்கும் பிரமுகர்களையும், எமது தமிழ்ச் சங்கம் சார்பில் நன்றியுடன் நினைவு கூருகின்றது.

நன்றி!



**கலாநிதி. பரதன் கந்தசாமி** (J.P.)
தலைவர்,
கல்முனை தமிழ்ச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை தமிழ்ச் சங்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

## செயலாளரிடமிருந்து...

கல்முனை பிரதேசம் தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், சிறந்த பேச்சாளர்களை கொண்டுள்ளது. இவ்வாறான சூழலில் சிலர் கல்முனையில் தமிழ்ச் சங்கம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற நோக்கில், கல்முனை நால்வர் கோட்டத்தில் ஒன்று கூடி கலந்துரையாடினோம். இதன் பயனாக எடுத்த தீர்மானத்தின் படி பலருக்கு அழைப்புக்கள் அனுப்பப்பட்டன. பலர் ஆதரவு வழங்கினர்.

இதன் நிறைவாக 10.12.2010ல் கல்முனை நால்வர் கோட்டத்தில் "கல்முனை தமிழ்ச் சங்கம்" அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. முதலில் 18பேர் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டனர். இவர்களில் இருந்து ஒரு நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது.

*தலைவர்* : **கலாநிதி பரதன் கந்தசாமி**
*செயலாளர்* : **வித்யா விஜயஸ்ரீ என்.நாகராஜா**
*பொருளாளர்* : **கலாபூசணம் முகில்வண்ணன் வே.சண்முகநாதன்**

ஏனைய உபதலைவர், உபசெயலாளர், நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இதில் பெண் உறுப்பினர்களும் இணைந்தனர். இச் சங்க ஆலோசகர்களாக கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. மு. கதிர்காமநாதன் அவர்களும், அருட்சகோதரர்.S.A.I.மத்தியூ அவர்களும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு பல கிராமங்களைச் சேர்ந்த புலவர்கள், கவிஞர்கள், சமய அறிஞர்கள், மதகுருமார், எழுத்தாளர்கள் இணைந்த கல்முனை தமிழ்ச் சங்கத்தின் மூலம் கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், கவிதையரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

சிறப்பாக 28.05.2011ல் அம்பாறை மாவட்ட கவிஞர்கள் ஒன்று சேர்ந்து சிறப்பான கவியரங்கு ஒன்றை நடாத்தி பலரின் பாராட்டுக்களைப் பெற்றனர். இதனை தொடர்ந்து அமரர் கலாபூசணம் பரமநாதபிள்ளை, அமரர் கவிஞர் சண்முகம் சிவலிங்கம்(அதிபர்) ஆகியோருக்கும் நினைவு அஞ்சலி கூட்டங்கள் நடைபெற்றன.

முகில் வண்ணனின் சிறுகதை நூல்கள், இந்து சமய இலக்கியங்கள் வெளியீடு செய்யப்பட்டன. சிலரின் வாழ்க்கை வரலாறு நிகழ்வுகளை நினைவூட்டும் "அது ஒரு நிலாக்காலம்" நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டதோடு, விவேகானந்தரின் 150வது ஆண்டுவிழாவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது 2012ல் க.பொ.த உயர்தர பரீட்சையில் 3A பெற்று சாதனை படைத்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வையும் ஒழுங்கு செய்துள்ளோம். இந்நிகழ்வானது ஏனைய மாணவர்களுக்கு மிகவும் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் வழங்கும் என எதிர்பார்க்கின்றோம். எமது தமிழ்ச் சங்க பணிகளில் கல்விப்பணி, தமிழ்பணி, சமூகப்பணிகள் முக்கியமானவை.

கல்முனை தமிழ்ச் சங்கம் அரசியல் சார்பற்றது, இன மத பேதங்கள் அற்றது. ஆர்வம் உள்ள எவரும் தமது சுயவிருப்பத்தில் நிர்வாகசபையின் சிபார்சுடன் அங்கத்தவராக சேர்ந்து கொள்ளமுடியும். அனைவரின் ஆதரவுடன், கல்முனை தமிழ்ச் சங்கத்துடன், மாணவ மீட்புப் பேரவையையும் இணைந்த க.பொ.த உயர்தர சாதனையாளர் பாராட்டு விழாவை நடாத்துவது மிகவும் மகிழ்ச்சியானது. எதிர்காலத்தில் எமது தமிழ்ச் சங்கம் சமய, சமூக, கல்வி பணிகளில் ஈடுபட்டு சேவையாற்ற இறைவன் ஆசிர்வாதம் கிடைக்க பிரார்த்திக்கிறேன்.

**வித்யா விஜயஸ்ரீ என். நாகராஜா** J.P.
கௌரவ செயலாளர்
கல்முனை தமிழ்ச் சங்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் வாழ்த்துச் செய்தி

செம்மொழியாம் தமிழ்மொழியை வளர்க்கும் உயரிய நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ச் சங்கம் பாரினிலே தமிழ் ஊற்றெடுக்க வேண்டி பணியாற்றுகின்றது. இப்பணியிலே கல்முனைத் தமிழ்ச் சங்கமானது முன்னோடி சிறப்பிதழாக "பொதிகை" யை இந்நாளிலே உங்கள் கைகளில் பொழிகின்றது. இவ் இதழின் ஆசிரியனாகவும் சமூகபணிகளில் ஒரு பக்க நிழலை ஆவணப்படுத்தும் வகையில் இப் பொதிகையில் என் எண்ண உருவாக்கம்.....

மாணவ மீட்புப் பேரவையானது, அம்பாறை மாவட்டத்திலே கல்வியில் பின்தங்கியுள்ள மாணவர்களின் வாழ்க்கையிலே, ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் தூய நோக்கோடு, இனப்பாகுபாடற்ற தொண்டாற்றி வருகிறது.

இவ்வமைப்பு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட, மற்றும் கிராமப்புறங்களிலே, நலிவடைந்துள்ள கல்வி நிலமைகளை வீறு கொண்டெழச் செய்ய, பல கல்வி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்தவகையிலே, இதுவரைகாலமும் இம் மாவட்டத்திலே 2800 குடும்பங்களைச் சேர்ந்த 3600 மாணவர்களின் வாழ்க்கையில், கல்விச் சுடரை மாணவ மீட்புப் பேரவை ஒளிர வைத்துள்ளது. இது மாத்திரமன்றி, திறமையுள்ளவர்களை கௌரவித்தல், நாளைய சமூகத்திற்கு பிரயோசனமுள்ள பிரஜைகளாக அவர்களை புடமிட்டு ஊக்கமளிப்பதோடு மட்டுமல்லாது, பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியிலே அவர்களை அந்நிலையிலிருந்து மீட்டெடுக்கும் பங்கினையும் சிறப்புடன் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இவ் அமைப்பின் ஸ்தாபகத் தலைவராக நானும், மேலும், பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட இளைஞர், யுவதிகள் உள்ளடங்கலாக இம்மாணவ மீட்புப் பேரவை எனும் கட்டமைப்பில் சமூகப்பணியாற்றி வருவதோடு, சமூகத்திலுள்ள கல்விக்கு கைகொடுக்கும் அமைப்புடன் இணைந்து சேவையாற்றியும் வருகின்றோம். அந்த வகையிலே, இந்த சாதனையாளர் பாராட்டு விழாவினை எங்கள் அமைப்பான மாணவ மீட்புப் பேரவையும், கல்முனை தமிழ்ச் சங்கமும் இணைந்து மெருகூட்டி நிற்கின்றது.

மேலும், இப் பொன்னான நிகழ்வில் கௌரவம் பெறும் அனைவரும் எமது எதிர்கால சந்ததிக்கு சிறந்த சேவையாற்றவும், இப்பிரதேசத்திலே சிறப்பான கல்வி சமூகத்தை உருவாக்கவும், உழைக்கவேண்டுமென வாழ்த்துவதோடு கௌரவம் பெறும் அனைவருக்கும் எமது பெறுமதிமிக்க நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

**கலாநிதி எஸ். கணேஸ்** (J.P.)
தலைவர்,
மாணவ மீட்பு பேரவை,
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டு பெறும் சாதனையாளர்களின் படங்களும் விபரங்களும்



**செல்வி. அருந்தவராஜன் துளாஞ்சனி**
*கமு/ கா.மே.ப.தே.பாடசாலை, கல்முனை.*
*(கலை)*



**செல்வன். உருத்திரன் உமாதாசன்**
*கமு/ சண்முகா மகா வித்தியாலயம், காரைதீவு.*
*(கலை)*



**செல்வி. கிருஸ்ணப்பிள்ளை துசாந்தினி**
*கமு/ உவெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை.*
*(கலை)*



**செல்வி. மகேந்திரன் கஜாயினி**
*கமு/ விபுலானந்தா மத்திய கல்லூரி, காரைதீவு.*
*(கலை)*



**செல்வன்.பாக்கியராசா பிரசாந்**
*கமு/ கா.மே.ப.தே.பாடசாலை, கல்முனை.*
*(வர்த்தகம்)*



**செல்வன். நடராஜா ரிஷாந்த்**
*கமு/ கா.மே.ப.தே.பாடசாலை, கல்முனை.*
*(வர்த்தகம்)*



**செல்வன். சின்னசாமி வினோக்காந்த்**
*கமு/ கா.மே.ப.தே.பாடசாலை, கல்முனை.*
*(வர்த்தகம்)*



**செல்வி. அப்துல் முத்தலிப் பியாசா**
*கமு/ கா.மே.ப.தே.பாடசாலை,கல்முனை.*
*(வர்த்தகம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**செல்வன்.யோகராசா டிலக்ஷன்**
கமு/கா.மே.ப.தே.பாடசாலை,கல்முனை.
வர்த்தகம்



**செல்வன். பாக்கியநாதன் மோகனதாஷன்**
கமு/ கா.மே.ப.தே.பாடசாலை,கல்முனை.
வர்த்தகம்



**செல்வி. இக்பால் பாத்திமா அகீலா**
கமு/ அல்-மஷ்கர் பெண்கள்
உயர்தரப் பாடசாலை, நிந்தவூர்.
(வர்த்தகம்)



**செல்வி. அருளம்பலம் ஜனனி**
கமு/ கா.மே.ப.தே.பாடசாலை, கல்முனை.
(வர்த்தகம்)



**செல்வி. அப்துல் கபூர் அபிதா பர்வின்**
கமு/ அல்-மஷ்கர் பெண்கள்
உயர்தரப் பாடசாலை, நிந்தவூர்.
(வர்த்தகம்)



**செல்வி. பாலசுந்தரம் வர்ணியா**
கமு/ ராமகிருஷ்ணன் மகா
வித்தியாலயம், கல்முனை.
(வர்த்தகம்)



**செல்வன். எம்.எச்.மொஹமட் மனாஸ்**
கமு/ ஸாகிரா கல்லூரி, கல்முனை.
(வர்த்தகம்)



**செல்வன். ஏ.எல்.எம்.ஜெஸ்லி ஹசன்**
கமு/ அல்-மதீனா மகா வித்தியாலயம், நிந்தவூர்
(வர்த்தகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**செல்வன். எம்.எச்.எம்.சாதிதீன்**
*கமு/ அல்-மதீனா மகா வித்தியாலயம், நிந்தவூர்*
*(வர்த்தகம்)*



**செல்வன். வீ.ரீ.எம் இம்றாத்**
*கமு/ அல்-மதீனா மகாவித்தியாலயம், நிந்தவூர்.*
*(வர்த்தகம்)*



**செல்வன். ஏ.பீ.மொஹமட் ஆஸ்கீ**
*கமு/ அல்-மதீனா மகா வித்தியாலயம், நிந்தவூர்.*
*(வர்த்தகம்)*



**செல்வி. எம்.எஸ்.பாத்திமா சிம்றிகா**
*கமு/ அல்-மதீனா மகா வித்தியாலயம், நிந்தவூர்.*
*(வர்த்தகம்)*



**செல்வன். மோகன் நிதர்சனன்**
*கமு/ கா.மே.ப.தே.பாடசாலை, கல்முனை.*
*(விஞ்ஞானம்)*



**செல்வன். வரதராஜன் ரிஷிகேஷ்**
*கமு/ கா.மே.ப.தே.பாடசாலை, கல்முனை.*
*(விஞ்ஞானம்)*



**செல்வி.அலெக்சாண்டர் நிரோஷா**
*கமு/ கா.மே.ப.தே.பாடசாலை,*
*கல்முனை.*
*(விஞ்ஞானம்)*



**செல்வி.மகேஸ்பரன் கஸ்தூரி**
*கமு/ கா.மே.ப.தே.பாடசாலை,*
*கல்முனை.*
*(வர்த்தகம்)*



**செல்வன்.பிரபாகரன் ரைற்றஸ் சஞ்சய்**
*கமு/ உவெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை.*
*(விஞ்ஞானம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முச்சங்கம் வளர்த்த தமிழ்
மூவேந்தர் உகந்த தமிழ்
பாவேந்தர் நா பயின்று,
பாரினிலே செம்மொழியான தமிழ்
பொதிகை தென்றலிலே சங்கமித்து
வங்கக் கடல் கடந்துவந்து
கல்முனை தமிழ்ச்சங்கப் பொதிகை
சுவைத்திரள் இதழானதுவோ!

பொய்மை நிறைந்த புவிதனிலே
உண்மைகளை விதைக்க ஒளி
பொங்கிப் புலரியதாய் மக்கள்
விழிப் பொய்கையிலே பூத்து
சோதனைகள், சுமைகள் தகர்த்தெறிந்து
சாதனை சரித்திரம் தினம் படைத்து
போதனை புதுமைகள் சுமந்து
செவியினி கனியாய் வரவேண்டும் பொதிகை.

மாணவ மணிகள் மனம் கொள்ள,
ஆவணக் கல்வி, அழியாக் கவிதை
கட்டுரை அறிவியல் சாராக்கங்கள்
வாசிப்பை ஊக்குவிக்கும் வழிமுறைகள்
எம் மண்ணின் கிராமியக் கலை கலாசாரம்
பண்பாட்டு விழுமிய பாரம்பரியம்
பட்டைதீட்டிப் பரிணமிக்கும் வைரமதாய்
எட்டுத் திக்கும் ஒளி பரப்பட்டும் பொதிகை,

இளயதலை முறைக்கு இடமளித்து,
பழைமை எழுத்தாளருக்கும் பங்களித்து
சாதிமத பேதமற்ற சமத்துவம் காத்து,
சாந்தி, சமாதானம் சகவாழ்வும் பெற்றிட
தத்துவார்த்தம் சான்றோர் அறிவுரை தாங்கி
வந்து கரம் தவழட்டும், பூங்கவிதைப் பொதிகை
ஆண்டுக் கொருமுறைதான் அவனியிலே மலர்ந்தாலும்
நீண்ட ஆயுளோடு நெடுகிலும் வாழவேண்டும்.

- ஆரையூர் அருள் -
துளசி வாசம்,
ஆரையம்பதி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை தமிழ்ச்சங்கப் பொருளாளரிடமிருந்து...



கல்முனை தமிழ்ச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து, பொருளாளராக இருந்து வருகின்றேன். இச்சங்கத்தால் நடைபெற்ற விழாக்கள் அனைத்தும் சங்கநிதியாகிய சந்தா பணத்திலிருந்தும் மேலதிகமாக தேவைப்பட்டபோது, உறுப்பினர்களிடமிருந்து அன்பளிப்பு பெறப்பட்டும் நடாத்தப்பட்டது.

உயர்தரவகுப்பில் சிறந்த பெறுபேற்றை பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வுக்கு மட்டுமே, நாங்கள் வெளியாரின் உதவியை நாடினோம். முதலில் இம் மாணவர்கள் கல்வி பயின்ற தனியார் கல்வி நிலையங்களை நாடினோம். இதுவும் அருட்சகோதரர் எஸ்.ஏ.ஐ.மத்தியூ அவர்களின் ஆலோசனையுடனும் அவரது சமூகத்துடனும் அனுகப்பட்டபோது, இதில் எமக்கு பெருத்த ஏமாற்றமே கிடைத்தது. கல்விமான்கள் என்று அணுகியதால் கிடைத்த ஏமாற்றமே இது.

இதன் பின் ஒரு சில பெருந்தகைகளை நாடியபோது, நல்ல வரவேற்பு எங்களுக்கு கிடைத்ததை நாங்கள் இங்கு குறிப்பிடவேண்டும். இங்கே அவர்களின் பெயர்களை குறிப்பிடுவது சாலப்பொருந்தும், என நினைக்கின்றேன். இத்தால் எமது கல்முனை தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1. **திரு.எஸ்.வித்தியானி** (அமெரிக்கா)
   (அமரர்.சண்முகம் சிவலிங்கத்தின் மகன்)
2. **திரு.கே.ஏ.ஜோஜ்** அவர்கள் - கல்முனை.
3. **டாக்.என்.ரமேஷ்** அவர்கள் - கல்முனை.
4. **டாக்.எஸ்.கிருஷ்ணகுமார்** அவர்கள் - பாண்டிருப்பு.
5. **திரு.வீ.வசீகரன்** அவர்கள் (கொழும்பு றைஸ்மில்)

இவ் விழாசிறப்புற நடைபெற ஒத்தாசையும், உதவியும், நன்கொடையும் அளித்த இவர்கள் அனைவருக்கும் இத்தால் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக எங்களுடன் இணைந்து இவ்விழா சிறப்பிக்க உதவும் மாணவ மீட்புப் பேரவைக்கும் எமது நன்றிகள்.



**கலாபூசணம் வே.சண்முகநாதன்.** J.P.
கௌரவ பொருளாளர்,
கல்முனை தமிழ்ச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மண்ணில் எம் கல்வி கலைகளைக்
கண்ணென மதிப்போம்”

கோல்டன் அச்சகம், கல்முனை. 077-1755314

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org